## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டிற்கான சிறப்புக் கல்விமாணித் தேர்வு

## (2014/2015)

## EDS 4123 ஒப்பீட்டுக்கல்வி (Comparative Education)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரண்டு (02) வினாக்களையும், பகுதி II இல் இருந்து ஏதாவது மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

### பகுதி I

1. (அ) ஒப்பீட்டுக்கல்வி பற்றி Vernomallinson முன்வைத்த வரைவிலக்கணத்தை சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

   (ஆ) ஒப்பீட்டுக்கல்வி மூலம் கிடைக்கும் சமூக நன்மைகள் யாவை? (05 புள்ளிகள்)

   (இ) பண்டைய கல்வி முறையின் நோக்கங்களைக் குறிப்பிடுக? (05 புள்ளிகள்)

2. பின்வரும் ஒப்பீட்டுக் கல்வி முறை பற்றிய அணுகுமுறைகளை முன்வைத்தவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதுடன் அவை தொடர்பாக அவர்கள் கூறிய கருத்துக்களையும் சுருக்கமாக விளக்குக.

   (அ) ஒப்பீட்டு ரீதியான அணுகுமுறை (04 புள்ளிகள்)

   (ஆ) வரலாற்று ரீதியான அணுகுமுறை (03 புள்ளிகள்)

   (இ) தத்துவ அடிப்படையிலான அணுகுமுறை (04 புள்ளிகள்)

   (ஈ) உய்த்தறி விஞ்ஞான முறை (03 புள்ளிகள்)

3. (அ) கோல்புறூக் ஆணைக்குழுவானது கல்வி தொடர்பாக முன்வைத்த விதந்துரைப்புக்களை தருக. (05 புள்ளிகள்)

   (ஆ) பொதுப் போதனைத் திணைக்களத்தின் பொறுப்புக்களை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

   (இ) 1939ஆம் ஆண்டின் மூன்றாம் இலக்க கட்டளைச் சட்டத்தின் முதலாம் பாகத்தில் உள்ளடங்கிய விடயங்களை பட்டியற்படுத்துக. (05 புள்ளிகள்)

### பகுதி II

4. (அ) ஒப்பீட்டுக் கல்வியைப் பெறும் முறைகளுள் புள்ளிவிபரவியல் முறை மற்றும் சமூகவியல் முறை என்பன எவ்வாறு கட்டுப்பாடுடையதாக அமைகின்றன என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

   (ஆ) இலங்கையின் புராதன கல்வி முறையில் பௌத்த கல்வி மரபு பெற்ற முக்கியத்தை தகுந்த ஆதாரங்களை முன்வைத்து ஆராய்க. (07 புள்ளிகள்)

(இ) உயர்கல்வி அமைப்பில் பிரிவேனாக்கள் பெற்ற செல்வாக்கினை உதாரணங்கள முன்வைத்து தெளிவுபடுத்துக. (07 புள்ளிகள

5. (அ) இலங்கையில் போர்த்துக்கேயர் கால கல்வி முறையின் சிறப்பியல்புகளைய அதில் காணப்பட்ட குறைபாடுகளையும் வகைப்படுத்துக. (10 புள்ளிகள

(ஆ) ஒல்லாந்தர் காலத்தில் பாடசாலை கல்வி ஆணைக்குழுவினால் ஏற்ப மாற்றங்களைக் குறிப்பிடுக. (07 புள்ளிகள

(இ) 1801 - 1838 வரையான காலப்பகுதியில் இலங்கையின் கல்வியில் ஏற்ப மாற்றங்களை ஆராய்க. (07 புள்ளிகள

6. (அ) 1943இல் வெளிவந்த கல்வி பற்றிய சிறப்புக்குழுவின் பரிந்துரைகள் இன்றை கால கல்வி வளர்ச்சிக்கு எவ்வாறு துணை நிற்கின்றது என்பதை விளக்குக. (08 புள்ளிகள

(ஆ) மோர்கன் குழுவினரால் முன்வைக்கப்பட்ட சிபார்சுகளை குறிப்பிடுவதுட அதனடிப்படையில் இலங்கையின் கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றங்களை குறிப்பிடுக. (08 புள்ளிகள

(இ) தத்துவக் காரணிகளின் அடிப்படையில் ஒப்பீட்டுக் கல்வியைப் பெ முறையினை ஆசிய நாடுகளை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள

7. (அ) இலங்கையின் கல்வி முறையில் மிக நீண்ட தாக்கத்தை ஏற்படுத்தியே பிரித்தானியர் ஆவார். இவர்களுடைய காலகட்டத்தில் கல்வி அபிவிருத்திய மிசனெறிகளின் பங்களிப்பினை ஆராய்க. (12 புள்ளிகள

(ஆ) உலக நாடுகள் அனைத்தும் பின்லாந்து நாட்டின் கல்வி முறை சிறப்புமிக்கதென போற்றுவதற்குரிய காரணத்தை அந்நாட்டு கல்வி முறைய சிறப்பம்சங்களை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துக. (12 புள்ளிகள

**மொத்தப்புள்ளிகள் - 100 (பகுதி I - 28 , பகுதி II – 72)**